"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) **கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி** (திருத்த) சட்ட முன்வடிவு, 1989 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)—தொடர்ச்சி.

(ஈ) **கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.